# மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை மேற்கு பிரதேச செயலகப்பிரிவுப் பகுதியின் வறுமைத்தாக்கம்

**ம. பிரியா**
புவியியற்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம்

**ஆய்வுச்சுருக்கம் :** கிழக்கு மாகாணத்தில் எழில்கொஞ்சும் கரையோர மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் அமைந்துள்ளது. இது 14 பிரதேச செயலகப் பிரிவுகளைக் கொண்டு காணப்படுகின்றது. இதில் மண்முனை மேற்கு பிரதேச செயலகப்பிரிவும் ஒன்றாகும். இது வடமேற்கே ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகப்பிரிவையும், தெற்கு எல்லையாக மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப்பிரிவையும் கிழக்கே மட்டக்களப்பு வாவியையும் எல்லைகளாகக் கொண்டு அமைந்துள்ளது. இது 24 கிராம சேவகர் பிரிவுகளையும் 116 கிராமங்களையும் கொண்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டசெயலகத்தின் புள்ளிவிபர அறிக்கையின் படி 2017 ஆம் ஆண்டின் மொத்த சனத்தொகை 32286 பேர் ஆகும். பிரதேசத்தில் இப்பிரதேசம் 292.7 சதுர கிலோமீற்றர் பரப்பில் அமைந்துள்ளது. கடந்த காலத்தில் யுத்த நிலைமைகளின் தாக்கத்திற்கு உட்பட்டு இருந்த இப்பிரதேசம் மிகவும் பின்தங்கிய கிராமங்களை உள்ளடக்கிய பிரதேசமாக காணப்படுகின்றது. இவ்வாய்வானது மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை மேற்கு பிரதேசத்தின் வறுமைத்தாக்கம் தொடர்பான ஆய்வாக காணப்படுகின்றது. இவ்வாய்வின் நோக்கங்களாக ஆய்வுப்பிரதேசத்தில் வறுமை நிலைமையினைக் கண்டறிதல், வறுமைக்கான அடிப்படைக் காரணிகளை கண்டறிதல் என்பன காணப்படுகின்றன. இவ்வாய்வானது அளவைசார் பகுப்பாய்வு நுட்ப முறைமை, பண்புசார் பகுப்பாய்வு நுட்ப முறைமை, மற்றும் புவியியல் தகவல் முறைமைக்கூடான இடரீதியான பகுப்பாய்வு முறைமை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுப் பிரசேத்தில் முதனிலைப் பொருளாதார நடவடிக்கைகள் காணப்படல், பருவகாலவேலையின்மை காணப்படல், தாழ்வருமானம், தங்கிவாழ்வோர் எண்ணிக்கை அதிகரிப்பு, குறைந்தளவான சுகாதார வசதிகள் காணப்படல், கல்வியறிவு வீதம் குறைவாக காணப்படல், குறைவான போக்குவரத்து வசதிகள் காணப்படல், குடிநீர்ப்பற்றாக்குறை, வீட்டுவசதிப்பிரச்சினைகள், பெண்தலைமை தாங்கும் குடும்பங்கள், பெண்கள் வெளிநாட்டுக்கு வேலைக்குச் செல்லல், மின்சார, தொடர்பாடல் வசதிகள் பற்றாக்குறை போன்றன வறுமை நிலைமை நிலவுவதற்கான பிரதான காரணிகளாக காணப்படுகினறன. இதனால் இப்பிரதேச மக்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள். இவ்வாறான விடயங்களை உள்ளடக்கியதாக இவ்வாய்வு காணப்படுகின்றது.


திறவுச்சொற்கள் : வறுமை, புவியியல் தகவல் முறைமை, அபிவிருத்தி, சமாதானம், கருதுகோள்

## 1. ஆய்வு அறிமுகம்

வறுமை உலக மக்களில் பெரும்பாலானோர் எதிர்நோக்கும் முக்கிய சவாலாக காணப்படுகின்றது. சொத்துக்கள் என ஒன்றுமில்லை தனிமை, ஆண்டு முழுவதும் வருமானமின்மை, குறைந்த வாழ்க்கைத்தரம், திடீர் சம்பவங்களுக்கு முகம்கொடுக்க முடியாமை போன்றவற்றால் ஆகக்குறைந்த மட்டங்களை அடைவதற்கான குறைவான சந்தர்ப்பத்தை பெற்றுக் கொள்ளும் ஒரு நிலையே வறுமை என றெபார்ட் சேம்பர்ஸ் என்பவர் வறுமையை வரையறை செய்கின்றார். இன்று வறுமை என்பது கஷ்டம் என்ற சொல்லின் மூலம் வெளியிடப்படுகின்றது. இக்கஷ்டம் என்பது போசாக்கு – 2350 கலோரி உணவு ஒரு நாளைக்குக் கிடைக்கப்பெறல், சுகாதாரம் - கொள்ளை நோய்கள் போன்றவற்றை பரவாமல் பாதுகாத்தல் அல்லது குறைக்க அல்லது முற்றாக குறைத்துக் கொள்ள முடியாத நிலை, இருப்பிடவசதி - இயற்கைச் சூழல், அல்லது காலநிலையியல் காரணிகளில் இருந்து நிரந்தரமான பாதுகாப்பு அழிக்கக் கூடிய வீட்டு வசதியின்மை, குடிநீர் வசதி-நகரப்புறங்களிலும் சரி கிராமப்புறங்களிலும் சரி 200m க்கு உட்பட்ட எல்லைக்குள் சுத்தமான குடிநீர் பெறக்கூடிய வசதியின்மை என்பவற்றை உள்ளடக்குகின்றது. வறுமையானது அபிவிருத்தி, சமாதானம் என்பவற்றுக்கான மிகப்பெரிய அச்சுறுத்தலாகவும் காணப்படுகின்றது. உலக சனத்தொகையில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் கொடிய வறுமையின் கீழ் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். வறுமயானது வளர்ச்சியடைந்த நாடுகளை விட வளர்முக நாடுகளில் நிலவும் முதன்மையான பிரச்சினையாக காணப்படுகின்றது. வறுமையின் பிரதிபலிப்புக்கள் அநேகமான நாடுகளில் புரையோடிப்போயுள்ள நிலையில் இதன் தாக்கம் பொருளாதார ரீதியில் அந்நாடுகள் பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்படுவதற்கும் அந்நாடுகளின் வளர்ச்சிக்கும் சவாலாக அமைகின்றது. இலங்கையும் வறுமையின் தாக்கத்திற்கு உள்ளான நாடாக காணப்படுகின்றது. பெரும்பாலும் வடகிழக்குப் பிரதேசங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. தலாவருமானம் 4166 ரூபாய்க்கு குறைவாக பெறுபவர்களை வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் சனத்தொகையாக இலங்கையில் கணக்கிடப்படுகின்றது. (2016 புள்ளிவிபரத்திணைக்களம் இலங்கை) இலங்கையில் தற்பொழுது 843913 பேர் வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவ்வகையில் இலங்கையின வறுமை தொடர்பான இலங்கை புள்ளிவிபரத்திணைக்களத்தின் 2016 ஆம் ஆண்டிற்கான புள்ளிவிபரங்களின் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்டம் அதிக வறுமையான மாவட்டத்தில் முதலிடத்திலும் மட்டக்களப்பு மாவட்டம் இரண்டாம் இடத்திலும் உள்ளன. 2016 இல் மட்டக்களப்பு மாவட்டத்தின் Poverty head count index 11. 3 ஆக காணப்படுகின்றது. பிரதேச செயலாளர் பிரிவுரீதியாக நோக்கும் போது முதலிடத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு பிரதேச செயலகப்பிரிவு இருப்பது குறிப்பிடத்தக்கது. இங்கு Poverty head count index 45.14 ஆகக் காணப்படுகின்றது. இவ்வகையில் ஆய்வுப்பிரதேசமான மண்முனை மேற்கு பிரதேச செயலகப்பிரிவானது மட்டக்களப்பு மாவட்டத்தில் சமூக, பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரதேசமாக காணப்படுவதுடன் வறுமைக்கான அடிப்படைகளையும் கொண்ட பிரதேசமாக காணப்படுகின்றது. எனவே இவ்வாய்வானது இப்பிரதேசத்தில் நிலவும் வறுமை வறுமைக்கான காரணங்களையும், கூறுவதாகவும் காணப்படுகின்றது.

## ஆய்வுப் பிரதேசம்

*விளக்கப்படம் 1. ஆய்வுப்பிரதேசத்தின் புவியியல் அமைவிடம்*




*மூலம் - ஆய்விற்காக ஆய்வாளனால் தயாரிக்கப்பட்டது. (GIS2018)*

## 2. ஆய்வு முறையியல்

ஒரு ஆய்வில் மிகவும் அடிப்படையானதாக ஆய்வு முறையியல் காணப்படுகின்றது. இந்த ஆய்வில் அளவை சார் ஆய்வு முறையியல், பண்புசார் ஆய்வு முறையியல் ஆகிய இரண்டு முறைகளும் பயன்படுத்தப்பட்டு உள்ளன.

### 2.1 அளவை சார் ஆய்வு முறையியல்

அளவை சார் ஆய்வுகள் என்பது அடிப்படையில் எண்ணிக்கையுடன் அல்லது தரவுகளுடன் சம்பந்தப்பட்ட வகையில் வழிநடத்தப்படுகின்ற ஆய்வினைக் குறிக்கின்றது. தரவுகளை பெற்றுக் கொள்ளுதல், அவற்றை செயன்முறைக்கு உட்படுத்துதல், அவ்வாறான தரவுகளில் இருந்து கருத்துக்களை பிரித்து எடுத்தல், பிரித்தெடுத்த தரவுகளை எண்களாலான தரவுகள் மூலம் பிரயோகம் செய்தல் போன்ற செயற்பாடுகள் அளவை சார் ஆய்வுகளில் இடம்பெறுகின்றன. சமூக விஞ்ஞான ஆய்வுகளில் அளவை சார்ந்த அணுகுமுறையே பெரிதும் வரவேற்கப்படுகின்றது. ஆய்வில் எடுத்துக் கொண்ட பிரச்சினைகளுக்கு தீர்வுகளை முன்வைப்பதற்கும், மிக ஆழமாக எடுத்துக் காட்டப்பட வேண்டிய சில விடயங்களை துல்லியமாகவும், இலகுவாகவும், சுருக்கமாகவும் எடுத்துக்காட்டுவதற்கும் அளவைசார் ஆய்வுகளே உதவியாக உள்ளன. இவ்வாய்வில் அளவைசார் ஆய்வு முறையில் பயன்படுத்தப்படும் மாதிரி நுட்பமுறைமை ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவ்வகையில் எழுமாற்று மாதிரி நுட்பம் ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளது. மண்முனை மேற்கு பிரதேச செயலகப்பிரிவில் உள்ள 10 கிராமங்கள் எழுமாற்றாக தெரிவுசெய்யப்பட்டு ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிலும் சனத்தொகை அளவிற்கு எற்ப 20 குடும்பங்களுக்கு ஒரு மாதிரி எனும் அடிப்படையில் வினாக்கொத்துக்கள் ஒழுங்கு முறையில் பகிர்ந்தளிக்கப்பட்டு மொத்தமாக 160 வினாக்கொத்துக்கள் மூலம் தகவல்கள் சேகரிக்கப்பட்டது.

*அட்டவணை 1 மாதிரித்தெரிவு*

| கிராமம் | குடும்பங்களின் எண்ணிக்கை | மாதிரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| இலுப்படிச்சேனை | 380 | 12 |
| பாவற்கொடிச்சேனை | 514 | 18 |
| ஆயித்தியமலை வடக்கு | 634 | 22 |
| காஞ்சிரங்குடா | 344 | 11 |
| கோத்தியப்புலை | 352 | 11 |

| | | |
|---|---|---|
| புதுமண்டபத்தடி | 550 | 19 |
| கரவெட்டி | 618 | 21 |
| பருத்திச்சேனை | 319 | 11 |
| மகிழவெட்டுவான் | 538 | 18 |
| விளாவெட்டுவான் | 504 | 17 |
| மொத்தம் | 4753 | 160 |

### 2.2 பண்பு சார் ஆய்வு முறையியல்

புவியியல் அளவைகளில் பண்புசார் முறையியலும் பரவலாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. பண்பு சார் ஆய்வுகள் இயற்கை அமைப்பில் மாறிகள் எவ்வாறு காணப்படுகின்றனவோ அதன் முக்கியத்துவத்தினை உள்ளவாறே நோக்குவதாகும். இதில் மாறிகளுக்கு இடையிலான தொடர்பு மிக முக்கியமானதாகும். பண்பு சார் ஆய்வு என்பது எண்கள் இல்லாத பரீட்சை என விபரிக்கப்படுகின்றது. இதன் பிரதான பண்புகளாக கண்டுபிடிப்பு, தேடல், கருதுகோள் உருவாக்கம் என்பன காணப்படுகின்றன. இந்த ஆய்வில் அவதானிப்பு முறைகளில் காணப்பட்ட வேறுபாடுளை வெளிக்கொணரும் முகமாக பண்புசார் ஆய்வு பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாய்வில் ஆய்வுப்பிரதேசத்தில் வறுமை நிலவுவதற்கான காரணங்கள் தொடர்பாக விபரிப்பதற்கு பண்புசார் ஆய்வு முறையியல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

### 2.3 முதலாம் நிலைத்தரவுகள்

ஆய்விற்காக வினாக்கொத்து, நேரடி அவதானிப்பு மூலம் ஆய்விற்காக தரவுகள் திரட்டப்பட்டுள்ளன. நேரடிக்கலந்துரையாடல் என்பதில் இப்பிரதேசத்தின் கிராமஉத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம மட்டங்களில் செயற்படும் அரச அரசசார்பற்ற நிறுவனங்கள் போன்றோர்களிடம் இருந்து தகவல்கள் பெறப்பட்டது. நேரடி அவதானிப்பு முறையின் ஊடாக இப்பிரதேசத்தில் வாழும் மக்களின் அடிப்படை வசதிகள், வாழ்க்கை முறைகள், அங்கு காணப்படும் உட்கட்டுமான வசதிகளின் நிலை போன்றவை நேரடியாக அவதானிக்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளது.

### 2.4 இரண்டாம் நிலைத்தரவுகள்


ஆய்வுப்பிரதேசம் தொடர்பான சமூக, பொருளாதார புள்ளிவிபரங்கள் மண்முனை மேற்கு பிரதேச செயலகத்தில் இருந்தும், மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் புள்ளிவிபரத்திணைக்களப்பதிவேடுகளில் இருந்தும் பெறப்பட்டு ஆய்விற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

### 2.5 தரவுப்பகுப்பாய்வு முறை

Microsoft Xcel மென்பொருள் மூலம் சேகரிக்கப்பட்ட இரண்டாம் நிலைத்தரவுகள் ஒழுங்குபடுத்தப்பட்டு அட்டவணைகளாகவும் வரைபுகளாகவும் தயாரிக்கபபட்டுள்ளது. SPSS மென்பொதி மூலம் ஆய்வுப்பிரதேசத்தில் வினாக்கொத்துக்கள் மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகள் இவ்மென்பொதியில் உட்புகுத்தப்பட்டு பிரதேசத்தினது வறுமையினை வெளிக்காட்டும் சமூக, பொருளாதாரக் குறிகாட்டிகளின் விபரம் வரைபுகளாக்கப்பட்டு ஆய்விற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ARC GIS 10.4.1 மென்பொதி மூலம் ஆய்வுப்பிரதசத்தின் அமைவிடம் மற்றும் பெண்தலைமை தாங்கும் குடும்பங்களின் பரம்பல் வரைபடமாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இடரீதியான பரம்பல் வெளிக்காட்டப்பட்டுள்ளது.

### 3. ஆய்வின் முடிவுகள்

*விளக்கப்படம் 2. மட்டக்களப்பு மாவட்டத்தின் வறுமையின் இடரீதியான பரம்பல்*




*மூலம் - ஆய்விற்காக 2017 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்ட செயலக புள்ளிவிபரத்தரவுகளை கொண்டு தயாரிக்கப்பட்டது.(GIS2018)*

மட்டக்களப்பு மாவட்டத்தின் வறுமை நிலை தொடர்பான இடரீதியான பரம்பல் நிலையினை புவியிட தொழினுட்பத்தின ஊடான பகுப்பாய்வின் மூலம் அறிந்து கொள்ள முடிந்தது. அவ்வகையில் மட்டக்களப்பபு மாவட்ட செயலகத்தின் அறிக்கையின் படி poverty head count index (2016) அப்படையாக் கொண்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் வறுமையின் இடரீதியான பரம்பல் படமாக்கப்பட்டுள்ளது. விளக்கப்படம் (2) அடிப்படையில் நோக்கும் போது மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆய்வுப்பிரதேசமான மண்முனை மேற்கு பிரசேத்தின் வறுமை நிலை அதிகமாக இருப்பதனைக் கண்டு கொள்ள முடிகின்றது.

வினாக்கொத்துக்கள் மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகளில் அருந்து ஆய்வுப்பிரதேசத்தின் வறுமை நிலைக்கான காரணிகள் தொடர்பாக பல விடயங்களையும் பெற்றுக் கொள்ள முடிந்தது


அவ்வகையில் மக்களின் வறுமை நிலைக்கு பல்வேறு சமூக, பொருளாதாரக் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அவை வீட்டுவசதிப்பிரச்சினைகள், குடிநீரைப்பெற்றுக் கொள்வதில் காணப்படும் பிரச்சினைகள், மலசலகூடவசதிகள் பற்றாக்குறை, குறைவான கல்வித்தரம், போக்குவரத்து மார்க்கங்கள் பற்றாக்குறை, அரசதொழிலில்லாத ஏனைய தொழில்களில் ஈடுபடல், பெண்தலைமை தாங்கும் குடும்பங்களின் எண்ணிக்கை காணப்படல், பருகால வேலையின்மை காணப்படல், தங்கி வாழும் சனத்தொகை அதிகமாக காணப்படல், போன்ற பல இன்னோரன்ன காரணிகள் ஆய்வுப்பிரதேசத்தில் வறுமை நிலவுதற்கான காரணங்களாக உள்ளன.

பிரதேசத்தினது சமூக அபிவிருத்தி நிலையினை வெளிப்படுத்துவதில் வீட்டுவசதிப்பிரச்சினை முக்கிய பங்கு வகிக்கின்றது. இந்தவகையில் மண்முனை மேற்கு பிரதேச செயலகப்பிரிவில் அமைந்துள்ள பெரும்பாலான வீடுகள் குடிசை வீடுகளாகவும், தற்காலிக தகரக்கொட்டில்களாகவும் காணப்படுகின்றன. சிறியளவில் கல்வீடுகளும் காணப்படுகின்றன. இவ்வாறு காணப்படும் கல்வீடுகளில் பெரும்பலானவை யுத்தத்தினால் இடம்பெயர்ந்து மீள்குடியமர்த்தப்பட்டதன் பின்னர் அரச அரசார்பற்ற நிறுவனங்களால் அமைத்துக் கொடுக்கப்பட்ட வீடுகளாகும். இங்கு காணப்படும் வீடுகள் பெரும்பாலும் ஒன்று அல்லது இரண்டு அறைகளைக் கொண்ட வீடுகளாகக் காணப்படுவதுடன் மலசலகூட வசதியற்ற வீடுகளாகவும் காணப்படுகின்றன. இவ்வாறு மலசலகூட வசதியற்ற மக்கள் இதற்காக காட்டுப்பகுதி, வயல் பிரதேசம் என்பவற்றைப் பயன்படுத்துகின்றர்கள். உண்மையில் இது சுகாதாரத்திற்கு பாதகம் விளைவிக்கும்


செயற்பாடாக காணப்படுகின்றது. சிலர் மலசலகூடம் இருந்தும் அதனை பாவிக்கும் முறை தெரியாத பாமர மக்களாக காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. சிலரது வீடுகளில் மலசலகூடத்தினுள் விறகுகள் அடுக்கி வைக்கப்பட்டு இருப்பதனையும் கண்டுகொள்ள முடிந்தது.

மின்சார வசதியினை பெற்றுக் கொள்வது தொடர்பாக நோக்கும் போது இதனை இப்பிரதேச மக்கள் பெற்றுக் கொள்வது பிரச்சினைக்குரிய விடயமாக காணப்படுகின்றது. இப்பிரதேதசத்தில் குறைந்தளவிலான வீடுகளிலேயே மின்சார வசதி காணப்படுகின்றது. மின்சார வசதியற்ற வீடுகளில் இன்றுவரை மண்ணெண்ணெய் விளக்குகளும் சிறிய அளவில் சூரிய சக்தி மூலமான வெளிச்சத்தினையும் பாவித்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. மின்சார வசதி பற்றாக்குறையினால் கல்வி கற்கும் பிள்ளைகள் தமது கல்வியினை ஒழுங்காக தொடர முடியவில்லை என ஆய்வின் போது பெரும்பாலான மாணவர்களால் குறிப்பிடப்பட்டது. அதேபோல் சில குடும்பங்கள் எவ்விதமான தொடர்பாடல் வசதிகள் அற்றவர்களாக வாழ்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. கீழ்வரும் வரைபடங்கள் ஆய்வுப்பிரதேச வீட்டுவசதி நிலைமைளைக் காட்டுகின்றது.


*வரைபடம் 1 ஆய்வுப்பிரதேச வீட்டின் தன்மை*





*வரைபடம் 2 ஆய்வுப்பிரதேச வீட்டின் அமைப்பு*




*வரைபடம் 3 ஆய்வுப்பிரதேச மலசலகூட வசதி*





*வரைபடம் 4 ஆய்வுப்பிரதேச மின்சார வசதி*




ஆய்வுப்பிரதேசத்தில் வறுமை நிலவுவதற்கு முக்கியமான காரணிகளுள் ஒன்றாக குடிநீர்ப்பிரச்சினை காணப்படுகின்றது. ஆய்வுப்பிரதேசத்தில் சொந்தக்கிணறு மூலம் குடிநீரைப்பெற்றுக் கொள்பவர்கள் ஒரு சிலரே காணப்படுகின்றார்கள். ஏனையோர் பொதுக்கிணறு மூலமும், அயலவர் கிணற்றிலும், வேறு வழிகளான ஆறு, குளம் போன்றவற்றில் இருந்தும் குடிநீரைப் பெற்றுக் கொள்கின்றார்கள். சொந்தக்கிணறுகளில் குடிநீரைப்பெறுபவர்கள் மாத்திரம் சுத்தமான குடிநீரைப்பருகும் நிலை காணப்படுகின்றது. ஏனையோர் பாதுகாப்பற்ற குடிநீரையே பருகுகின்றனர். இப்பிரதேசத்தில் காணப்படும் முக்கிய பிரச்சினை கோடை காலங்களில் கிணறுகளில் முற்றாக நீர் வற்றிப்போகின்றமை ஆகும். நீரைப்பெற்றுக் கொள்வதற்காக வெகுதூரம் செல்வதனால் குடிநீரினை இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு வீட்டில் பாதுகாப்பற்ற முறையில் சேமித்து பருகுகின்றனர். இதன் காரணமாக பல நோய்களுக்கும் ஆளாகும் நிலைமை காணப்படுகின்றது.


*வரைபடம் 5 ஆய்வுப்பிரதேச மக்கள் குடிநீரைப் பெறும் வழிமுறைகள்*




*மூலம் - ஆய்வாளனால் தயாரிக்கப்பட்டது (வெளிக்கள ஆய்வுத்தரவுகள் 2018)*

ஆய்வுப்பிரதேசத்தில் போக்குவரத்து வசதிகள் பற்றாக்குறையாக காணப்படல் பிரதேசத்தின் பின்தங்கிய நிலைக்கு காரணமாக அமைகின்றது. பெரும்பாலும் இங்கு காணப்படுகின்ற வீதிகள் ஒடுங்கிய மணல் மற்றும் கிரவல் வீதிகளாகவே காணப்படுகின்றன. இம்மக்கள் தமது சேவைகளைப் பெறுவதற்காக மட்டக்களப்பு நகரத்திற்கு வந்து செல்கின்றனர். இவர்கள் பேருந்து வசதியினைப் பெற்றுக் கொள்வதற்கு நீண்ட தூரம் பயணிக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. அத்துடன் பெரும்பாலான வீதிகள் ஆறு வாய்க்கால்கள் என்பவற்றை ஊடறுத்துச் செல்வதனால் மாரிகாலங்களில் இதன்ஊடாக பயணிக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது. அதிகமான வீதிகள் சரியான முறையில் அமைக்கப்படாமலும் திருத்தப்படாமலும் குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. மாரி காலங்களில் வெள்ள நிலைமை காரணமாக ஒட்டுமொத்தமாக இப்பிரதேச போக்குவரத்து பாதிக்கப்படுகின்றது. இதனால் இப்பிரதேச மக்களின் கல்வி, தொழில் நடவடிக்கைகள் என்பன பாதிக்கப்படுவதுடன் மருத்துவ சேவைகளைப் பெறுவதிலும் சிரமமப்படுவதுடன் பொருளாதார ரீதியாகவும் பாதிப்புக்குள்ளாகின்றனர். இது இப்பிரதேச வறுமைநிலைக்கு ஒரு காரணியாக உள்ளது.

*வரைபடம் 6 ஆய்வுப்பிரதேசத்தின் போக்குவரத்து நிலைமைகள்*





*மூலம் - ஆய்வாளனால் தயாரிக்கப்பட்டது (வெளிக்கள ஆய்வுத்தரவுகள் 2018)*

மருத்துவ சுகாதார வசதிகளின் பற்றாக்குறையும் ஆய்வுப்பரதேசத்தின் பின்னடைவுக்கு முக்கிய காரணியாக காணப்படுகின்றது. இப்பிரதேசத்தில் காணப்படும் 116 கிராமங்களுக்கும் சேவையளிக்கும் வகையில் 3 அரச மருந்தகங்களே காணப்படுகின்றன. இதனால் மக்கள் மருத்துவ வசதிகளை இலகுவாக பெற்றுக் கொள்வதில் தடங்கல்கள் காணப்படுகின்றது. பெரம்பாலனோர் தமது மருத்துவ தேவைக்காக மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்கு செல்ல வேண்டிய சூழ்நிலையும் ஏற்படுகின்றது. இதன்போது போக்குவரத்தில் ஏற்படும் தாமதத்தால் உயிரிழப்புக்களையும் சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது.

தங்கிவாழ்வோர் தொகை அதிகமாக காணப்படல் பிரதேசத்தில் வறுமை நிலை தொடர காரணமாக உள்ளது. ஆய்வுப்பிரதேசமான மண்முனை வடக்கு பிரதேசத்தில் 20 வயதிற்கும் குறைவான தங்கிவாழும் சனத்தொகையினர் மிக அதிகமாக காணப்படுகின்றனர். 2017 ஆம் ஆண்டு ஆய்வுப்பிரதேசத்தின் மொத்த சனத்தொகையான 32286 பேரில் 12630 பேர் 20 வயதிற்கு உட்பட்டவர்களாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் ஆய்வுப்பிரதேசத்தின் மொத்த சனத்தொகையில் தங்கிவாழும் முதியோர் தொகை 6 சதவீதமாக காணப்படுகின்றது. இதனால் முதியவர்கள் தங்கிவாழும் நிலையும் காணப்படுகின்றது. இதனால் ஒருவருடைய உழைப்பில் குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் தங்கியிருக்கும் நிலைமை காணப்படுகின்றது. மேலும் குடித்தனத்தலைவரின் கல்வி நிலை குறைவு என்பதனால் குறைவருமானம் பெறும் தொழில்களை அவர்கள் மேற்கொள்வதனால் பெறும் வருமானம் தங்கிவாழும் சனத்தொகையின் தேவையினை ஈடு செய்ய போதுமான சனத்தொகையாக காணப்படவில்லை. இதனால் இப்பிரதேச மக்கள் பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றனர்.


*வரைபடம் 7 ஆய்வுப்பிரதேசத்தின் சனத்தொகை கட்டமைப்பு 2017*




*மூலம் - ஆய்வாளனால் தயாரிக்கப்பட்டது (மட்டக்களப்பு மாவட்ட செயலக புள்ளிவிபரத்திரட்டு 2017)*

ஆய்வுப்பிரதேசத்தில் பின்தங்கிய கல்வி நிலைமைகள் காணப்படுவதும் பிரதேச வறுமைக்கு மிக முக்கிய காரணியாக காணப்படுகின்றது. இங்கு கல்வி மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது. பெரம்பான்மையானோரின் கல்வி அடைவு மட்டம் குறைவாகவே காணப்படுகின்றது. இதற்கு மிகக் முக்கிய காரணியாக காணப்படுவது குடும்ப வருமானம் குறைவாக காணப்படுகின்றமை, தங்கிவாழ்வோர் அதிகமாக இருத்தல், பெற்றோரின் கல்வியறிவின்மை இதன் காரணமாக பிள்ளையின் கல்வி தொடர்பில் அக்கறையற்றவர்களாக காணப்படல் போன்றன காரணமாகின்றன. பெரம்பாலானோர்கள் கையெழுத்து மாத்திரம் வைக்கத் தெரிந்தவர்களாக மட்டும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. உயர்தரப்பாடசாலைகளின் பற்றாக்குறை காரணமாக மாணவர்கள் தொலைதூரம் நடந்து சென்று கற்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. இதனால் நேரதாமதமாக பாடசாலைக்குச் செல்லுதல், தொடர்ச்சியான வரவின்மை போன்றன காணப்படுகின்றன. இதனால் கல்வி அடைவு மட்டம் பின்தங்கியுள்ளது. இதனால் சமூகவளர்ச்சியின்மை, சமூக மாற்றங்களுக்கு முகம் கொடுக்க முடியாமை, தைரியமின்மை, எதிர்பார்க்கின்ற தொழில்கள் கிடைக்காமை, மனரீதியான பின்னடைவு, மது பாவனை அதிகரித்தல், போன்றவற்றால் இப்பிரதேசத்தில் வறுமை நிலவுகின்றது.

*வரைபடம் 6. ஆய்வுப்பிரதேசத்தின் கல்வி நிலைமைகள்*





*மூலம் - ஆய்வாளனால் தயாரிக்கப்பட்டது (வெளிக்கள ஆய்வுத்தரவுகள் 2018)*

முதனிலைப் பொருளாதார நடவடிக்கை அதிகமாக காணப்படுவதும் பிரதேசத்தின் வறுமைக்கான முக்கிய காரணியாக காணப்படுகின்றது. ஆய்வுப்பிரதேசத்தில் அதிகமாகனோர் விவசாயத் தொழில்களையே மேற்கொள்ளபவர்களாக உள்ளனர். அதிகமான வறிய விவசாயிகள் தமது நிலத்தை செல்வந்தர்களுக்கு குத்தகைக்கு வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இங்கு அதிகமான

நிலச்சொந்தக்காரர் மட்டக்களப்பு நகரில் இருந்து வந்து விவசாயம் செய்பவர்களாகவே உள்ளனர். விவசாய விளைச்சலை சந்தைப்படுவத்துடன் தொடர்புபட்ட பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்க்ள. விவசாயத்திற்கான போதிய முதலீடு இன்மையினால் மொத்த வியாபாரிகளிடம் கடன் வாங்குவதால் வெளியீடுகளையும் அவர்களிடமே குறைந்த விலையில் விற்க வேண்டிய நிலைக்கு உள்ளாகின்றனர். இதனால் மீண்டும், மீண்டும் கடன்காரர்களாகவே விவசாயிகள் தள்ளப்பட்டு வறுமை நிலைக்குத்தள்ளப்படுகின்றார்கள். மேலும் மீன்பிடித்தொழிலை மேற்கொள்பவர்கள் பாரம்பரியமான உபகரணங்களை பயன்படுத்துவதனால் சிறப்பான உற்பத்தியை பெறமுடியாதவரடகளாக உள்ளனர்.


*வரைபடம் 6 ஆய்வுப்பிரதேசத்தின் தொழில் நிலைமைகள்*




*மூலம் - ஆய்வாளனால் தயாரிக்கப்பட்டது (வெளிக்கள ஆய்வுத்தரவுகள் 2018)*

பெண்தலைமை தாங்கும் குடும்பங்களின் எண்ணிக்கை பிரதேசத்தில் அதிகமாக காணப்படுவதும் ஆய்வுப்பிரதேசத்தில் வறுமை நிலவுதற்கான அடிப்படைக் காரணியாக காணப்படுகின்றது. யுத்தம் மற்றும் ஏனைய இடர்கள் மூலம் தமது கணவனை இழந்த பெண்கள் தமது குடும்பங்களைக் கொண்டு நடாத்தும் வல்லமை குறைந்தவர்களாக காணப்படுகின்றார்கள். இதனால் இவர்கள் தொடர்ந்தும் வறுமைக் கோட்டிற்கு கீழேயே வாழவேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது.

*விளக்கப்படம் 3. மண்முனை மேற்கு பிரதேசத்தில் பெண்தலைமை தாங்கும் குடும்பங்களின் பரம்பல்*




*மூலம் - ஆய்விற்காக 2017 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்ட செயலக புள்ளிவிபரத்தரவுகளை கொண்டு தயாரிக்கப்பட்டது.(GIS2018)*

மண்முனை மேற்கில் மொத்தமாக 1622 குடும்பங்கள் பெண்தலைமை தாங்கும் குடும்பங்களாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாக காணப்படுகின்றது. கிராம ரீதியாக நோக்கும் போது இலுப்படிச்சேனை கிராமசேவகர் பிரிவில் 105 குடும்பங்கள் பெண்தலைமை தாங்கும் குடும்பங்காளாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இவர்கள் சமூக பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுவதனால் ஆய்வுப்பிரதேசத்தில் வறுமை நிலை தலைதூக்கியுள்ளது. இவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வாங்குவதற்கான செலவு , தனியார் கல்வி நிலையங்களுக்கு சென்று கல்வி பயில்வதற்கு போதியளவு நிதி கிடைப்பதில்லை எனக் கூறுகின்றார்கள் மற்றும் பிள்ளைகளுக்கான போசாக்கான உணவு, உடை, பாதுகாப்பு என்பவற்றை வழங்குவதற்கு தம்மால் முடிவதில்லை எனவும் குறிப்பிடுகின்றனர்.

## 4. சாராம்சம்

இங்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நோக்கத்திற்கு அமைய மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் இப்பிரதேசத்தில் வறுமை நிலவுகின்றது. இங்கு வறுமை ஏற்படுவதற்கு சமூக, பொருளாதார காரணிகள் பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்றன. இப்பிரதேசத்தின் சமூக, பொருளாதார நிலைகளில் ஏற்பட்ட பின்தங்கிய நிலையே வறுமைக்கு காரணமாகும். ஆய்வுப்பிரதேச சமூக, பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கு பல பொது அமைப்புக்கள் முயற்சிகளை முன்னெடுக்கின்ற போதிலும் அம்மக்களின் வாழ்க்கைத்தரத்தை அதிகரிக்க போதுமானதாக காணப்படவில்லை. இங்கு வறுமையைக் குறைக்க வேண்டுமானால் சமூக, பொருளாதாரத்தில் அபிவிருத்தியை ஏற்படுத்தக்கூடிய வினைத்திறன்மிக்க செயற்திட்டங்களை அமைத்து செயற்படுத்த வேண்டும்.

**5. சான்றுகள்**

*Poverty head index in Batticaloa district 2016*

| பிரதேச செயலகப்பிரிவு | Poverty Head Count index |
|---|---|
| மண்முனை மேற்கு | 45.14 |
| கோறளைப்பற்று தெற்கு | 37.68 |
| மண்முனை தென்மேற்கு | 28.93 |
| கோரளைப்பற்று வடக்கு | 27.99 |
| போரதீவுப்பற்று | 25.84 |
| ஏறாவூர்ப்பற்று | 24.69 |
| கோரளைப்பற்று | 18.42 |
| மண்முனைப்பற்று | 13.98 |
| மண்முனை தென்எருவில் பற்று | 13.94 |
| ஏறாவூர் நகரம் | 10.99 |
| கோரளைப்பற்று மத்தி | 10.99 |
| மண்முனை வடக்கு | 08.06 |
| கோரளைப்பற்று மேற்கு | 07.73 |
| காத்தான்குடி | 05.26 |

*மூலம் - மட்டக்களப்பு மாவட்ட செயலகப்புள்ளிவிபரப் பதிவேடு 2016*

**6. உசாத்துணைகள்**


1. Department of census & Statistic 2017, Statistic Hand Book Batticaloa District, Kachcheri Batticaloa.
2. Divisional Secretariat Resource Profile, 2017, Divisional Secretariat Manmunai West Vavunateevu.
3. சிறிகாந்தன்.இ, 2008, வறுமை இலங்கை குறித்த ஒரு சிறப்புப்பார்வை, பொருளாதாரச் செல்வழி, பூபாலசிங்கம் புத்தகசாலை, பொருளியில் துறை கொழும்பு பல்கலைக்கழகம், யுனிஆர்ட்ஸ் பிறைவேட் லிமிடெட் கொழும்பு 13.
4. வர்ணகுலசிங்கம்.ம, 2007, தீவிரமடையும் வறுமை நிலையும் சமூக, பொருளாதார சீர்கேடுகளும், தென்னாசிய பொருளாதாரப்புவியியல், கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை, சாராமா பிரிண்டர்ஸ் வெளியீடு.
5. ரத்னாயக்கா.ஆர்.எம்.கே, கிராமிய வேலைவாய்ப்பு மற்றும் வறுமை ஒழிப்பு என்பன குறித்த நீண்ட கால வாய்ப்புக்கள், பொருளியல் நோக்கு , நவம்பர், டிசம்பர் 2012, மக்கள் வங்கி வெளியீடு இலங்கை.